1982 ஏப்ரல் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ரெவின்யூ கிராமங்களுக்கு ஒரு கடை அல்லது இரண்டு கடைகள் என்று வைக்கும்போது இரண்டு கிலோ மீட்டர் அல்லது மூன்று கிலோ மீட்டர் கூட போக வேண்டியிருக்கிறது. ஆங்காங்கிருக்கிற சூழ்நிலைமையையொட்டி கடைகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளலாமா என மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கூட்டுறவு அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் கடையை அவர்கள் வசதிக்கேற்ப மாற்றவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரை கேட்டிருப்பதாக அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பற்றிய நிலைமையை என் கவனத்திற்கு கொண்டு வந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் தக்க நடவடிக்கைகள் எடுக்கலாமா என்பது பற்றி ஆராயலாம்.

ஜெயங்கொண்டம் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்கும் திட்டம்.

* **வினா எண்,—777 திரு. பி. தங்கவேலு:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜெயங்கொண்டம் தொகுதியில் நன்செய், புன்செய் பயிர்கள் பெரும்பாலான பகுதிகளில் மழையின்றி காய்ந்து விட்டதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசு கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் ஜெயங்கொண்டம் தொகுதியை வறட்சிப் பகுதியாக அரசு எப்போது அறிவிக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்,

(ஆ) வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை ரூ. 29.89 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 428 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

திரு. கே. ஆர். சுந்தரம்: வறட்சி நிவாரணத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் சென்ற ஆண்டு போல் இந்த ஆண்டும் வறட்சி நிலை ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது. எனவே முன்கூட்டியே வறட்சி நிவாரண வேலைகளை செய்ய அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத்தலைவர்: கேள்வி, ஜெயங்கொண்டம் தொகுதி பற்றியது.